# தீபநெறி

மெய்ப் பொருள் காண்பது அறிவு

தீபம் 6 நெறி 9 தமிழ் மாத இதழ் ₹1 ஏப்ரல் - 2016

பட்டினியில்லா...
நோயில்லா...
குற்றமில்லா...

வளமான உலகம்
உருவாக்குவோம்!



என்னுள்ளே அரும்பி என்னுள்ளே மலர்ந்து
என்னுளே விரிந்த என்னுடை அன்பே!

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !
வள்ளல் மலரடி வாழ்க!! வாழ்க !!!

# வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றோம்!



நித்ய அன்னதானத்திற்கு 6 மாதங்களாக, தினமும் காய்கறிகளை அள்ளித்தரும்
அருளாளர் தயாளதிரு. C. அந்தோணிராஜ் - பூங்கொடி
குடும்பத்தை தீபம் மனதார வாழ்த்துகிறது

## " தீபநெறி " ஆசிரியர் குழு




கே.எஸ். உமாபதி
ஆசிரியர் - தீபநெறி இதழ்
கே.கே. நகர்
கைபேசி : 95518 49757



அன்பின் பிடியுள்
அர. இலட்சுமணசாமி
இராணிப்பேட்டை
தொலைபேசி :04172 273293
கைபேசி : 80564 38488



இலக்கியச்செல்வர்
இளந்தேவன்
அய்யப்பந்தாங்கல்
கைபேசி : 99400 92876



வள்ளலார் சிற்றடியேன்
குருபக்கிரிசாமி
ஆசிரியர் - அருட்சுடர்
வடலூர்
94428 12844



கு. பாலகிருஷ்ணன்
தணிக்கை & வெளியீட்டாளர்
தீபநெறி இதழ்
கைபேசி : 94440 73635

# தீபநெறி தொண்டர்களின் தினசரி தியானம்



தர்மம்

ஆக்கம்
திரு. கே.என். உமாபதி அவர்கள்,
கே.கே. நகர்



தவம்



1. அறியாமை அடியோடு அகலட்டும்!
2. ஆன்ம நேயம் ஆல்போல் தழைக்கட்டும்!
3. இல்லாமை இல்லாமல் புதையட்டும்!
4. ஈவது இயல்பாய் இருக்கட்டும்!
5. உயிரிரக்கம் யாக்கைகள் ஒளிரட்டும்!
6. ஊக்கமுற்று யாக்கைகள் ஒளிரட்டும்!
7. எல்லா உயிர்களும் இன்புற்று வாழட்டும்!
8. ஏற்றதாழ்வு இடருற்று போகட்டும்!
9. ஐம்பூதங்கள் மாசுபடுவதை தடுக்கட்டும்!
10. ஒன்றே இறையென உணர்த்தட்டும்!
11. ஓயாமல் வையகத்தில் அருட்பா ஒலிக்கட்டும்!
12. ஒளடதமாம் அருட்பெருஞ்ஜோதி அற்புதங்கள் நடத்தட்டும்!

**தர்மம் செய்வோம் ! தயவுடன் வாழ்வோம் !**

## அருட்பெருஞ்ஜோதி அகவல்
## அனுபவ உரை
(திண்டுக்கல் சுவாமி தயவு சரவணானந்தா)

### அருட்பெருஞ்ஜோதி

1. அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
2. அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

(உரை விளக்கம்): அருட்பெருஞ்ஜோதி என்ற சொல், பொருள் விளங்காத ஒன்றாக இல்லைபோல் தோன்றுகிறது. ஆனாலும் அதன் உண்மை விளக்கம் பெரிதும் பெருமையுடைத்தாகும். ஜோதி என்றால், நிறையொளியாம். பெருஞ் ஜோதியாவது, மிகப் பெரிய ஜோதி விண்மணியாம் சூரியனே. வான் விளங்கு விண்மீன் ஒவ்வொன்றும் பெரிய பெரிய ஜேதி என்பது அறிவியல் அனுபவம். ஆனால் இந்த ஜோதிகள் எல்லாம் தோற்றக் காரணமான நிறைபெருஞ் ஜோதியை கேலக்ஸ்சி என்கின்றனர். இந்நிறைஜோதிக்கும் இதுபோன்ற பல பேரொளி நிலைகட்கும் இடம் கொடுத்துள்ள அகண்ட பெருவெளி முற்றும் நீக்கமுற நிறைந்து நின்று எல்லா ஜோதிகளின தோற்ற ஒடுக்கங்களுக்கும் காரணமாயுள்ளது தான் நமது அருட்பெருங் ஜோதி ஆகும். இந்த அருட்பெருஞ்ஜோதியாம் இறைஒளி அளப்பரிய அகண்ட பெருவெளி எல்லாம் செறிந்து இயற்கையுண்மையாய் இருந்து கொண்டும், இயற்கை விளக்கத் தோற்றங்களாய் வெளிக்காட்டி மறைந்து கொண்டும், இயற்கை இன்பத்தை, முடிவில், நிறைமனித வடிவில் அனுபவ பூர்வமாய் வழங்கிக் கொண்டும் இருக்கின்றதாம். இவனது அனுபவத்தில் தான் இந்த அருட்பெருஞ்ஜோதியின் நிறைஉண்மை விளக்கம் கண்டு கொள்ளப்படுகின்றது.

மேற்படி அருட்பெருஞ்ஜோதி நான்கு நிலை கொண்டதாய்க் குறிக்கப்படுகின்றது.

புறத்தே

1. வான்வெளி நிறைமின் காந்த ஒளி நிலை
   (வான் கலந்த பெருஞ்ஜோதி அக்கினி நிலை)
2. விண்மணியாம் ஞாயிறு ஜோதி நிலை.
3. தண்மதி நிறைகலைச் சந்திர ஜோதி நிலை.
4. தீபச்சுடர் விளக்கின் ஒளி நிலை.

இவை போன்று பக்குவ மனிதனின் அக அனுபவத்தே நான்காய் விளங்கும் ஜோதி நிலையுளவாம். அவையாவன: (புறமிருந்து அகம் நோக்கிச் செல்லும் போது)

1. தேகேந்திரிய விளக்க ஒளிநிலை
2. மனோகரண விளக்க ஒளிநிலை
3. ஜீவ உணர்வு விளக்க ஒளிநிலை
4. ஆன்ம ஞான விளக்க ஒளிநிலை

இந்த நானிலை அனுபவம் உண்டாக வேண்டி, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நெறிகளை வகுத்து, அவற்றின் அடைவாக, சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய பதவி விளக்கங்களையும் வழங்கினர் ஆன்றோர். இந்நானிலை முடிவே, நான்கு கால் ஒன்றாவது போல் முழு நிலை அனுபவத்தைக் கூட்டி வைப்பதாய்க் கொள்ளப்பட்டதாம். இதனையே முடிவாகக் கொண்டதால் இறையொளி கண்ட ஒருவன் அவ்வொளியில் நாட்டம் வைத்துக் கலந்து மறைந்தே போனான். அப்படி மறைந்து ஒழியாது, வாழ்வு பெற்று விளங்கவே நம் அக அனக சுத்த சன்மார்க்கம் திருவருளால் வெளியாக்கப்பட்டுள்ளது.

சுத்த சன்மார்க்கி, தயவோடு கூடிய சத்விசாரத்தால் அகம் விளங்கும் அருள் இறைஒளியை ஆன்ம ஆலயமாகிய சத்திய ஞானசபையில் அருட்பெருஞ் ஜோதியாகக் கண்டு கலந்து அதுவாகி நின்று, அவ்வருட் பெருஞ் ஜோதியையே விரிவு செய்து ஜீவனிலும், கரணத்திலும், இத்திரிய தேகத்திலும் நிரம்பிடக் கொண்டு வாழ்வதால் அருட்பெருஞ் ஜோதியின் முழு நிலை அனுபவமும் பெற்று முடிவிலாதென்றும் விளங்கலாம் என்பது நம் வள்ளலார் கண்ட உண்மையாகும். ஆகவே இந்தக் கடவுட்பேறு எய்தும்படி திருவாய் மலர்ந்து அருளப்பெற்றஇவ் அருட்பெருஞ் ஜோதி அகவல் தொடக்கத்தே இந்த நான்கு அருட்பெருஞ் ஜோதியைக் காண்கின்றோம். அடுத்து வரும் அடிகளின் விளக்கத்தை ஆய்ந்து கொள்ளுவோம்.

தொடரும்...

# 7ம் ஆண்டு



5000 பேருக்கு பசியாற்றுவித்தலுக்கான
அன்னமும்... பிரார்த்தனையும்...



ஆண்டுவிழா பசியாற்றுவித்தலின் ஒரு பகுதி - நாள் : 10.04.2016

# அன்னதான விழா காட்சிகள்



விழாவை சிறப்பித்த விழா நாயகர்
குத்தாலம் கங்கை இர. மணிமாறன் அவர்கள்




"சடங்குகளில் அடங்காத சன்மார்க்கம்" என்ற உரையை
ஆவலோடு கேட்கும் மெய்யன்பர்கள்

## தமிழ்நாட்டின் ஜீவகாருண்ய செம்மல்

## வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த

# மனித தெய்வம்



ஜோதியுள் கலந்த நாள் : 10.04.2016 ஞாயிற்றுக் கிழமை

**தருமமிகு சென்னையை பட்டினியில்லா சென்னையாக மாற்றிய,**

**பெரம்பூர் அருள்ஜோதி அன்ன ஆலய நிறுவனர்,**

**சன்மார்க்க சீலர், சத்தீஷ் அடிகள் அவர்களுக்கு**

**தீபம் அறக்கட்டளையின் புஷ்பாஞ்சலி**

## உயிரைக் காப்பாற்றும் ஒரே கடவுள் - உணவு



நித்ய அன்னதானம் 7 ஆண்டுகளாக
சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச் சாலையில் பசியாற்றுவித்தல்



நடமாடும் தர்மச்சாலையின் மூலம் பல்லாவரம் பகுதியில்
பசித்த குழந்தைகளுக்கு தேடிச்சென்று அன்னமிடல்

## கருணையே கடவுள்



சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலையை தன் அற்புதக் கலையால்
2 இரவுகளாக அலங்கரித்த, ஜமீன் பல்லாவரம் திரு. மகாதேவன் அவர்கள்



சிவராத்திரியை முன்னிட்டு வேளச்சேரி தண்டீஸ்வரம் கோவிலில்
திரு. மகாதேவன் தலைமையில் பஜனை, பிரார்த்தனை மற்றும் 5000 பேருக்கு
அதிகாலை 3 மணி வரை அன்னப்பிரசாதம்

## இரக்கமே இறைவன்



அன்னதானத்திற்கு அன்போடு காய்கறிகளை நறுக்கும் சேவடிகள்
திரு. கோவர்தன் மற்றும் திரு.பாரதி அவர்கள்



நித்ய தீப தருமச்சாலையில் அன்னதானப்பணியில் அருளாளர்கள்

அன்பு என்பது நெல் மாதிரி போட்டால் தான் முளைக்கும்.
வம்பு என்பது புல் மாதிரி எதுவும் போடாமலே முளைக்கும்.

தொடர்ந்து 6 ஆண்டுகளாக

தீபம் அறக்கட்டளையின்

## ஏழை எளிய மாணவ / மாணவியருக்கு

# இலவச கல்வி உதவி

| கல்வி ஆண்டு | பயன் பெற்ற ஏழை மாணவ - மாணவியர் | இலவச கல்வி உதவித் தொகை |
|---|---|---|
| 2010-11 | 80 | ரூ.3,75,000.00 |
| 2011-12 | 97 | ரூ.5,67,365.00 |
| 2012-13 | 115 | ரூ.6,18,000.00 |
| 2013-14 | 85 | ரூ.5,11,680.00 |
| 2014-15 | 73 | ரூ.4,50,000.00 |
| 2015-16 | 87 | ரூ.3,45,920.00 |

கடந்த 6 ஆண்டுகளாக மேற்கண்ட தொகை, இலவச கல்வி உதவி தொகையாக வழங்கப்பட்டது. இத்தருணத்தில் கல்வி உதவித் தொகைக்கு உதவிக்கரம் நீட்டிய தர்மத்தின் அருளாளர்களை தீபம் அறக்கட்டளை தலை வணங்குகிறது. வாழ்க அவர்தம் தர்மம்!. வரும் 2016-17ம் கல்வி ஆண்டில், கல்வி கட்டணம் செலுத்த முடியாத நூற்றுக்கணக்கான கிராமபுற ஏழை மாணவர்களுக்கு, தீபம் அறக்கட்டளை இலவச கல்வி உதவி தர உள்ளது. ஏழை மாணவ, மாணவிகள் மேற்படிப்புக்கு உதவ விரும்புகின்ற, கருணை உள்ளம் கொண்ட தயவாளர்கள், ஏழை மாணவச் செல்வங்களுக்கு கல்வி உதவியை, தீபம் அறக்கட்டளை மூலமாக நிதி உதவிகளை வழங்கலாம்.

## FREE EDUCATIONAL HELP WILL BE EXTENDED STRICTLY TO

- DIPLOMA EDUCATION
- COLLEGE ( DEGREE) EDUCATION

உதவியை பெற / தர காத்திருக்கும் கைபேசி எண்கள்

## 94440 73635, 22442515

To get application for free educational help, please send a self addressed requisition to

# DEEPAM TRUST

No.30, Drowpathi Amman Koil Street,
( Next to Mosque) Velachery, Chennai - 600 042.

# கல்வி உதவித் தொகை

## அரசு கல்லூரியில் டிப்ளமோ, டிகிரி முடிக்க முழு கல்வி உதவி

### நல்ல மதிப்பெண்கள் பெற்றும் கல்லூரியில் சேர வசதியில்லையா?

சாதி, மத பேதம் பார்க்காமல் ஏழை எளிய மற்றும் நன்கு படிக்கக்கூடிய மாணவ, மாணவியர்களுக்கு சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளை கடந்த 6 ஆண்டுகளாக 526 மாணவர்களுக்கு ரூபாய் 28, 76, 965 கல்வி உதவித் தொகை வழங்கியுள்ளது.

2016-17 ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித்தொகைக்கு இப்பொழுது விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

10 மற்றும் +2 வகுப்பில் நல்ல மதிப்பெண்கள் பெற்றும் குடும்ப வறுமையினால் படிப்பைத் தொடர முடியாத, கிராமபுற ஏழை எளிய மாணவர்களுக்கு, தீபம் அறக்கட்டளை உதவ தயாராக உள்ளது. அரசு கல்லூரிகளில் கலை மற்றும் அறிவியல், டிப்ளமோ பயிலும் மாணவர்களுக்கு மூன்று வருட படிப்பிற்கு தேவையான அனைத்து உதவிகளையும் தீபம் அறக்கட்டளை செய்ய உள்ளது. ஆதரவற்ற மாணவ, மாணவிகளுக்கு கல்வி, உணவு, உடை என அனைத்து உதவிகளையும் தீபம் அறக்கட்டளை செய்யும்.

இந்த செய்தி ஒரு ஏழை மாணவனுக்கு உதவலாம். தீபம் அறக்கட்டளையை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :



***தீபம் அறக்கட்டளை***

***எண் 30, திரௌபதி அம்மன் கோவில் தெரு,***

***வேளச்சேரி, சென்னை - 600 042. தொலைப்பேசி எண் : 044 22442515***

(திங்கள் முதல் சனிக்கிழமை வரை மாலை 3 மணி முதல் இரவு 9 மணிக்குள் தொடர்பு கொள்ளலாம்)

**உன் பிள்ளை ஊமையாய் பிறந்தால் சொத்து சேர்த்து வை!**
**சொத்து சேர்த்து வைத்து உன் பிள்ளையை ஊனம் ஆக்காதே!**

ஆரோக்கியமான / ஆனந்தமான வாழ்க்கைக்கு

# ஆத்ம ஞான யோகா

(1989 முதல் ...... 27 ஆண்டுகளாக)

## ஒரு வாரப் பயிற்சி

இப்போது

சென்னை, வேளச்சேரி

## நித்ய தீப தருமச்சாலையில்

எண். 7/8, புத்தேரிக் கரை தெரு

வேளச்சேரி, சென்னை – 42.

(❖ பிராணயாமா ❖ தியானம் ❖ வாழும் கலை)

## அனுமதி : 25 பேருக்கு மட்டும்

முன்பதிவு அவசியம்

23.05.2016 திங்கள் முதல்

29.05.2016 ஞாயிறு வரை

நேரம்

காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை

தொடர்புக்கு

## தீபம் அறக்கட்டளை

வேளச்சேரி: 94440 73635 / 22442415



ஆடிக் காரில் போவது வசதியான வாழ்க்கை இல்லை

ஆஸ்பத்திரிக்கு போகாமல் வாழ்வதே வசதியான வாழ்க்கை

# யோக வாழ்க்கை

மனிதனின் மனம் நெறி முறையில் இல்லாத பொழுது, பல இன்னல்களையும் அவன் சந்திக்க நேரிடுகிறது. வாழ்க்கையில் உண்மையான இன்பம் காண மனிதன் தன் உடலையும், உள்ளத்தையும் நெறிப்படுத்துவது அவசியம். அதற்கு யோகா மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. யோகா என்பது பயிற்சி மட்டும் அல்ல. அது வாழ்க்கை முறை. மனிதன் தன் மனதை மிருக உணர்ச்சியிருந்து தெய்வ உணர்வுக்கு உயர்த்தும் முறைக்கு பெயர்தான் யோகா. முதன்மையாக உடல் ஆரோக்கியம் அவசியம். அதற்குத்தான் சில உடல் ஆசன பயிற்சிகள் யோகாவில் அமைந்திருக்கிறது. மன இறுக்கம், உளைச்சல் இருந்தால் மனம் தன் தெய்வ சக்தியை உணர முடியாது. ஆகையால் மூச்சுப் பயிற்சி, தியானம் ஆகிய சாதனைகளை நமக்கு நம் முன்னோர்கள் வழங்கி உள்ளார்கள். மனம் தான் தன்னை மிருக குணத்திருந்து தெய்வ நிலைக்கு உயர்த்திக் கொள்ள வேண்டும். ஆஞ்சநேயர் குரங்காக பிறந்தாலும், நல் சேர்க்கையால் தன்னை சிறந்த ராம பக்தனாக மாற்றிக் கொண்டார். மனம் மிருகத்திருந்து நல்ல மனித குணத்திற்கு மாறியது. இராவணன் மிக்க வடித்த அறிவாளியாக இருந்தும் அவன் மனம் காமத்தால் மிருக குணத்திற்கு மாறியது. இராமர் மனிதனாக பிறந்து தர்ம நெறி வாழ்ந்து தன்னை தெய்வமாக உயர்த்திக் கொண்டார். யோகா மனிதனை கீழ் உணர்ச்சியிருந்து தெய்வ நிலைக்கு உயர்த்தும் ஓர் உன்னத வழி முறையாகும்.

ஜெய் குரு தேவ்

இராசாராமன்
ஆத்ம ஞான யோகா
பயிற்சியாளர் : 9789016935

# தீபத்தின் மனித நேயப் பணிகள்



ஊரப்பாக்கம் மாற்றுத்திறனாளி பாலாஜி குடும்பத்திற்கு
அரிசி வழங்குதல் - 2 வருடங்களாக



அனகாபுத்தூர் சேகருக்கு டயாலிஸிஸ் மருத்துவ உதவியாக
மாதந்தோறும் ரூபாய் 5000 வழங்குதல் – 2 வருடங்களாக

# சேவடியே வாருமய்யா

சேவடியே வாருமய்யா
சேவை செய்ய சேருமய்யா! (சேவடியே)
தூஅடியே தாருமய்யா
பூ அடியைச் சேருமய்யா! (சேவடியே)

அற்றார்க்கு உதவிடவே
இற்றைநாள் சேர்ந்திடுவோம்
அற்றார் அழி பசியினையே
அழகாகத் தீர்த்திடுவோம் (சேவடியே)

பட்டினியை ஒழித்திடவே
பாங்காகக் கூடிடுவோம்!
திட்டமிட்டுச் செயல்களையே
தேர்ந்து செய நாடிடுவோம்! (சேவடியே)

அருட்பெருஞ் ஜோதிவழி
அன்பாகச் சென்றிடுவோம்!
தனிப் பெருங் கருணையுடன்
தகவாக நின்றிடுவோம்! (சேவடியே)

(புலவர் இராம. வேதநாயகம், வடமாதிமங்கலம்,
திருவண்ணாமலை மாவட்டம்.
கைபேசி : 98431 47981)

# நித்ய தீப தர்மசாலை

கடந்த 7 ஆண்டுகளாக தினசரி நூற்றுக்கணக்கான
பசியால் வாடும் வறியவர்களுக்கு

## அன்னம் பாலிப்பு

### அறப்பணிக்கு

நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன



**தங்கள் சக்திக்கேற்ப, விருப்பத்திற்கேற்ப அன்னம் தந்து மகிழலாம்.**

## "தர்மம்" செய்ய எண்ணமுள்ளவர்கள்

தாங்கள், தங்கள் குடும்ப உறுப்பினர்களின் பிறந்த நாள்,
திருமண நாள் மற்றும் விஷேச நாட்களில் ஏழை, எளியோருக்கு
அன்னம் தந்து மகிழ்ந்து ஆன்ம லாபம் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

**மேலும் விவரங்களுக்கு மே & ஜூன்**
**முன்பதிவிற்கு தொடர்பு கொள்ளவும்:**

## 94440 73635 / 2244 2515

Donations may be sent by crossed cheque to :

## Deepam Trust

No. 30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

**For Bank Transfer**

**State Bank of India, IIT Branch**
**A/c. No. 30265475129 / IFS Code SBIN0001055**

## DONATIONS ARE 80G EXEMPTED



## துர்முகி ஆண்டு மாத பூசம் நாட் குறிப்பு 2016-16

| தமிழ் மாதம் | நாள் | ஆங்கில நாள் | கிழமை | விழா விபரம் |
|---|---|---|---|---|
| சித்திரை | 1 | 14.04.2016 | வியாழன் | மாதப்பூசம் |
| சித்திரை | 29 | 12.05.2016 | வியாழன் | மாதப்பூசம் |
| வைகாசி | 11 | 24.05.2016 | செவ்வாய் | தருமச்சாலை துவக்க நாள் |
| வைகாசி | 26 | 08.06.2016 | புதன் | மாதப்பூசம் |
| ஆனி | 21 | 05.07.2016 | செவ்வாய் | மாதப்பூசம் |
| ஆடி | 18 | 02.08.2016 | செவ்வாய் | மாதப்பூசம் |
| ஆவணி | 13 | 29.08.2016 | திங்கள் | மாதப்பூசம் |
| புரட்டாசி | 9 | 25.09.2016 | ஞாயிறு | மாதப்பூசம் |
| புரட்டாசி | 19 | 05.10.2016 | புதன் | வள்ளலார் வருவிக்க உற்றநாள் |
| ஐப்பசி | 7 | 23.10.2016 | ஞாயிறு | சித்திவளாகக் கொடி கட்டுதல் |
| ஐப்பசி | 7 | 23.10.2016 | ஞாயிறு | மாதப்பூசம் |
| கார்த்திகை | 4 | 19.11.2016 | சனி | மாதப்பூசம் |
| மார்கழி | 1 | 16.12.2016 | வெள்ளி | மாதப்பூசம் |
| மார்கழி | 29 | 13.01.2017 | வெள்ளி | மாதப்பூசம் |
| தை | 26 | 08.02.2017 | புதன் | கொடியேற்றம் |
| தை | 27 | 09.02.2017 | வியாழன் | தைப்பூசப் பெருவிழா |
| தை | 29 | 11.02.2017 | சனி | சித்திவளாகத் திருஅறை தரிசனம் |
| மாசி | 24 | 08.03.2017 | புதன் | மாதப்பூசம் |
| பங்குனி | 23 | 05.04.2017 | புதன் | மாதப்பூசம் |

சத்திய ஞானசபையில் ஒவ்வொரு மாதப்பூச தினங்களில் இரவு 8 மணி அளவில் ஆறு திரைகள் நீக்கி மூன்று முறை அருட்பெருஞ்ஜோதி தரிசனமும், தைப்பூச தினத்தில் காலை 6 மணி, 10 மணி, பிற்பகல் 1 மணி, இரவு 7 மணி, 10 மணி, மறுநாள் காலை 5.30 மணி ஆக ஆறு காலங்களில் ஏழுதிரைகள் நீக்கி ஒவ்வொரு காலமும் மூன்று முறை அருட்பெருஞ்ஜோதி தரிசனம் நடைபெறும். வருக! வள்ளலார் அருள் பெறுக!

**தீபம் அறக்கட்டளை**

*எண் 30, திரௌபதி அம்மன் கோவில் தெரு, வேளச்சேரி, சென்னை - 42.*
*தொலைப்பேசி எண் : 044 22442515, 94440 73635*

**ஜாதியும், மதமும் பொய்யென**
**ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி**

## புரிதல்

தொடர்ச்சி...

காஞ்சி முனிவர் கூற்று—
மருத்துல சாஸ்திமா – சாகர், சுஷ்ருதர்
வானசாஸ்திமா – வராஹமிஹிர், ஆர்யபட்டர்
ஜோதிஷ சாஸ்திரமா – ஜைமினி முனிவர்

சுருங்கச் கூறுவதாயின், ஆயகலைகள் அறுபத்தி நான்கிலும் நல்ல தேர்ச்சி பெற்றவர்களாக நாம் இருந்தோம்.

தமிழில் பதினெண் சித்தர்கள் பாடல் மருத்துவ நுணுக்கங்கள் பண்டிதர்கள் சிலரால் விளக்கப்படுகின்றன. ஆனால்,

நாம் அனைத்திலுமே பின் தங்கியவர்களாக ஆகிவிட்டது எதனால்?

அன்னியர் ஆட்சியில் அடிமைகளாக வாழ்ந்ததினாலா? புரிதல் ஏற்படுத்தப்பட்ட குழப்பங்கள் தான் காரணம். புரியும் திறன் மிக்கோர், குறைவாகவும், மிகக் குறைவாகவும் புரியும் திறன் அற்றோரை மிகப்பலராக, பெருந்திரளாக உருவாக்கியது தான் உண்மைக் காரணம்.

எண்ணுந்திறனில் ஏற்றத்தாழ்வு மிக அதிகமாக இருந்ததால் தொழுதுண்டு பின் சென்று அடியாட்களாகவே தங்கள் விதியை நொந்து கொண்டு வாழப்பழகி விட்டோம். இன்றும் நிலைமை வெகுவாக மாறவில்லை.

ஆலயங்கள் அமைத்தனர் நமது ஆன்றோர். கட்டிடக்கலையில் நமது திறனைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன இன்றளவும் பல ஆலயங்கள்.

ஆலயங்கள் பற்றி மகா பெரியவர் காஞ்சி முனிவர் தெய்வக்குரலாக அருளியதை அவர் வார்த்தைகளாகத் தருகின்றேன்.

கோயில்களில் சூழ்நிலை அமைதியாக, தூய்மையாக இருக்க வேண்டும். பகவத ஸ்மாணை தவிர மற்ற நினைவுகள் மறந்து விடும்படியாக இருக்க வேண்டும். ஆனால் இப்போது என்ன பார்க்கிறோம்?

பெரும்பாலான க்ஷேத்திரங்களில் கோயிலைச் சுற்றி ஏகப்பட்ட, கடைகள் வந்துவிட்டன. டீக்கடை, சிகரெட் எதுவுமே பாக்கி இல்லை.

கோயில் அதிகாரிகளே, கோயிலுக்கு வருமானம் கிடைக்கிறது என்பதால் இந்த இடங்களை வாடகைக்குக் கொடுக்கிறார்கள். அதாவது, அநேகமாக ஸ்வாமியைத் தவிர கோயிலையே வாடகைக்குக் கொடுத்திருப்பதாகச் சொல்லலாம்.

இம்மாதிரியான சூழ்நிலையில் தெய்வ சாந்நித்யத்தை நாம் கிரகித்துக் கொள்கிற சக்தி குறைகிறது. நம் பக்தி சுற்றுச் சூழலால் குறைகிறது.

காட்டேஜ் எக்ஸ்கர்ஷன் எல்லாமே அநேக க்ஷேத்திரங்களில் பக்தியை விட, உல்லாசக் கேளிக்கைகளைத்தான் அதிகப்படுத்தியிருக்கின்றன.

மொத்தத்தில், நம் வீட்டில் நம்மால் சகிக்க முடியாத அபசாரங்களை சாக்ஷாத் வேங்கடரமண ஸ்வாமி சன்னதியிலும் மற்றும் பல தெய்வ சன்னதிகளிலும் இழைக்கிறோம்.

நமது பக்தியின் இன்றைய நிலையை வேதனையோடு வெளியிட்டிருக்கிறார். புரிந்து கொள்ள மறுக்கிறோமே ஏன்??

நன்மையையும் – நலம் விசாரிக்கக் கூடியவைகளையும், தீமைகளையும்

பிரித்துப் பார்க்கக் கூட தயங்குகிற அவல நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டோம்.

நல்லவர்களை – நல்லவைகளை இனங்காணவாவது துணிவிருக்கிறதா ?

சோழர் காலத்திலேயே நாங்கள் சிறப்பான தேர்தல் முறையைக் கையாண்டோம். "குடவோலை" பற்றிய கல்வெட்டுச் செய்திகளைப் பேசிப் பெருமிதப்படுகிறோம்.

"குடவோலை" பற்றிய சிறுவிளக்கம் கூறிவிட்டு தொடர்கிறேன்.

சுருக்கமாக:– குடவோலைத் தேர்தல் முறை, இன்றைய தேர்தல் பெருந்திருவிழா போன்று நான்கு மாதங்கள் நடப்பது அல்ல. நாலாயிரம், நாற்பதாயிரம் கோடிகள் செலவில் நடப்பதல்ல.

அந்தந்தப் பகுதியில் வாழ்ந்து வருகிறகண்ணியமான கல்விகளில் தேர்ந்த ஒழுக்க சீலர்களை நல்லவர்கள் சிலர் சேர்ந்து, பிரேதிபித்து ஓலைகளில் அவர்கள் பெயர்களைப் பொறித்து குடத்திட்டு, ஊர்ப் பெரியவர்கள் முன்னிலையில் ஒரு குழந்தையை குடத்திருந்து ஓலைகளை ஒவ்வொன்றாக எடுத்துத் தரச்சொல்வர் அனைவர் முன்னிலையில் அவர்கள் பெயரைப் படித்து, அவர்களைப் பொறுபேற்கச் சொல்வார்களாம். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஒரு ஆண்டுக்காலம் தான் பொறுப்பில் இருக்கலாம். அடுத்த முறை, அவர்கள் பெயர்கள் பிரயோகிக்கப்பட மாட்டாது.

இன்று போல, ஆளப்பிறந்தவர்கள் ஒரு சிலரே எனும் துர்பாக்யம் அன்றில்லை போலும்.

உங்கள் ஏமாற்றத்தை, ஏக்கத்தை கொட்டுகிறீர்களா என்று மட்டும் புரிகிறது. நாம் என்ன செய்யலாம் ? என்ன செய்து விட முடியும் என்று தானே கேட்கிறீர்கள் ?

நம்மால் முடிய வேண்டும் – நாம் ஏதாவது செய்து தான் ஆக வேண்டும். ஒரு எளிய சூத்திரம் கூறி நிறைவு செய்கிறேன்

நேற்றைய நகலாக வாழ்வதை ஆய்வு செய்து அகற்றிட முயலுங்கள். இன்று புதிய துவக்கமாக இருக்கட்டும்.

அறிதல் – ஆய்தல் – தெளிதல் – உணர்தல் – ஒன்றுதல் இது தான் சூத்திரம்.

அறிந்ததை ஆய்வு செய்து தெளிவு பெற்றபின், அதனை உள்வாங்கி உணர்வாக்கி அதனோடு சங்கமியுங்கள்.

இது ஒவ்வொரு தனி மனிதனின் இயல்பாக மாறினால் தான் மனித சமுதாயத்திற்கு விமோசனம்.

கிரேக்க ஞானி சாக்ரடீஸ், துவங்கி, தமிழகத்து வடலூர் ஞானி வள்ளலார் வரை விடுத்த அறைகூவல்தான் – புதிதாக ஒன்றுமில்லை.

நம்பிக்கையோடு தான் உவம்மின் உலகீர் என விளித்தார், வள்ளலார்.

செவிமடுத்தோர் சிலர், சிந்தையில் தேக்கினோர் மிகச் சிலர், செயல் நடைமுறைப்படுத்தி வாழ்வை உன்னதமாக்கினோர் ? ? ?

– இலட்சுமணசாமி
இராணிப்பேட்டை
80564 38488

# Deepam Trust - Donation Form

After Reading the Social Activities of Deepam Trust, I would like to donate a sum of Rs...................by cheque / demand draft / money order / wire transfer towards the following social activities.

1) Annadanam ☐ 2) Rice ☐ 3) Clothes ☐

4) Education Help ☐ 5) Medical Help ☐ 6) Building Fund ☐

Name : Sri / Smt / Dr..............................................................

Address..............................................................................

City:.............................State.......................Pin........................

Mobile:.............................Email...............................................

Birth Day.............................Wedding Day..............................

Deepam Trust was referred by :................................................

Donor's signature...........................Date:.................................

1st Time Donor: (Please tick) ☐ Aleady Donated : ☐

Do you get our Newsletter **"Deepa Neri"** ? - Yes / No (Pl. tick)

For Money Transfer : DEEPAM TRUST
State Bank of India, IIT Branch
Current A/c No. : 30265475129 / IFS Code : SBIN0001055

Note : Demand Draft / Cheque in favour of **"Deepam Trust"**

Address : Deepam Trust, No. 30, Droupathi Amman Koil Street, (Next to Masque), Velachery, Chennai - 600042. Mobile : 94440 73635

**DONATIONS ARE EXEMPTED UNDER 80G OF IT**

# உணவே உயிர்! உயிரே கடவுள்



நித்ய அன்னதானத்திற்கு தினமும் காய்கறிகளை அள்ளித்தரும் வேளச்சேரி
**பெரியாண்டவர் சூப்பர் மார்க்கெட்**



காய்கறிகளின் கண்கொள்ளா காட்சி உபயம் : பெரியாண்டவர் ஸ்டோர்

**தயவுதிரு. C. அந்தோணிராஜ் அவர்களுக்கு நன்றி! நன்றி! நன்றி!**

RNI : TNTAM/2010/35284

R.No. TN/CC(S)Dn/412/14-16

"REGISTERED" LICENSED TO POST WITHOUT PREPAYMENT
UNDER WPP NO. TN/PMG(CCR) / WPP-290/2014-2016
Date of Publication : 20th of Every Month

# 7ம் ஆண்டு விழாவில் 5000 பேருக்கான அன்னதான நிகழ்வில் இரவில் சேவை செய்த தீபம் சேவடிகள்



To
Shri / Smt / Dr

POSTED ON
29.04.2016

If undelivered Please Return to :

# DEEPAM TRUST

(REDG. No. - 2035/07)
No. 30, Drowpathi Amman Koil Street, (Next to Mosque) Velachery, Chennai - 600 042.
Cell : 94440 73635 Phone : 2244 2515 Email: trust.deepam@yahoo.co.in

Published by : M. Balakrishnan on behalf of Deepam Trust,
No.30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042 and
Printed by RK. Shekar at Sree Offset Printer, No. 840, Anna Salai, Saidapet, Chennai - 600 015.
Editor : M. Balakrishnan